
# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி

## முதல்நிலை அறிக்கை



மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டர்

ஆகஸ்ட் 2024

# ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி

முதல்நிலை அறிக்கை

# உள்ளடக்கம்


அறிமுகம 4

முறைமையியல் 5

முடிவுகளின் சாராம்சம் 6

பொருளாதார நிலைமை 6

வரைபு 01: ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, உங்கள் தற்போதைய பொருளாதார நிலையை எப்படி விவரிப்பீர்கள்? - தேசிய 6

வரைபு 02: ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, உங்கள் தற்போதைய பொருளாதார நிலையை எப்படி விவரிப்பீர்கள்? - இனம் 7

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி 7

வரைபு 03: சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என நீங்கள் எவ்வளவு தூரம் நம்புகின்றீர்கள் என்பதைக் கூற முடியுமா? - தேசிய 7

வரைபு 04: சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என நீங்கள் எவ்வளவு தூரம் நம்புகின்றீர்கள் என்பதைக் கூற முடியுமா? - இனம் 8

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் காணப்படுகின்ற முன்னேற்றம் 8

வரைபு 05: கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை, பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்தளவு தூரம் முடிந்துள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய 8

வரைபு 06: கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை, பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்தளவு தூரம் முடிந்துள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம் 9

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தல் 9

வரைபு 07: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா? - தேசிய 9

வரைபு 08: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா? - இனம் 10

அட்டவணை 01: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா? -வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 10

வரைபு 09: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா? - தேசிய 10

வரைபு 10: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா? -இனம் 11

அட்டவணை 02: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 11

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் ஜனாதிபதித் தேர்தல் முடிவின் முக்கியத்துவம் 11

வரைபு 11: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய 12

வரைபு 12: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம 12

அட்டவணை 03: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 12

அரசாங்கம் முன்னெடுத்த செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு 13

வரைபு 13: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஃ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்ஃதீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - தேசிய 13

வரைபு 14: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டஃ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களஃதீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம் 14

அட்டவணை 04: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஃ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்ஃதீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - வயது, பாலினம் மற்றும் பிரதேசம். 15

அரசாங்கம் முன்னெடுத்த செயற்திட்டங்களுக்கான ஆதரவு 15

வரைபு 15: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஃ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஃ தீர்மானங்களுக்கான ஆதரவு - தேசிய 16

வரைபு 16: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஃ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஃ தீர்மானங்களுக்கான ஆதரவு - இனம் 17

பெருந்தோட்டத்திலுள்ள லயங்களை சட்டபூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தலிற்க்கான ஆதரவு 18

வரைபு 17: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக? - தேசிய 18

வரைபு 18: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக? - இனம் 18

அட்டவணை 05: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமாக கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 19

ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு 19

வரைபு 19: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - தேசிய 19

வரைபு 20: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம் 20

அட்டவணை 06: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 20

வேட்பாளர்களின் ஆற்றல் மீதான நம்பிக்கை 21

வரைபு 21: முக்கிய மூன்று வேட்பாளர்களில், பின்வரும் செயல்முறைகளை செயற்படுத்துவார் என நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - தேசிய 21

வரைபு 22: நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம். 22

வரைபு 23: பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஒரு சிறந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஐஆகு உடன் பேச்சுவார்த்தை நடாத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 23

வரைபு 24: சிறுபான்மை சமூகங்களின் பிரச்சனைக்கு தீர்வு காண நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 24

வரைபு 25: ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கு நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 25

வரைபு 26: பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூற வைத்தலிற்கு நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 26

வரைபு 27: நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 27

வரைபு 28: வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்ய நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 28

வரைபு 29: மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 29

வரைபு 30: போருக்குப் பிந்தைய நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 30

வரைபு 31: ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 31

வரைபு 32: பொருளாதார மீட்சிக்கான மாற்று அணுகுமுறைகளைக் கண்டறிய நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 32

உங்கள் குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய மிகவும் பொருத்தமான வேட்பாளர் 33

வரைபு 33: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய 33

வரைபு 34: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம் 33

அட்டவணை 07: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம் 34

# அறிமுகம்

இவ் அறிக்கையானது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) - கணக்கெடுப்பு ஆய்வுப்பிரிவான சோஷல் இன்டிகேட்டரினால் (SI) நடாத்தப்பட்ட ஜனநாயக ஆட்சித் தொடர்பான நம்பிக்கைச் சுட்டி (அலை 6) ஆய்வின் பிரதான முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இக்கணக்கெடுப்பு ஆய்வானது, பொருளாதார சீர்திருத்தங்கள், மீள்நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் தொடர்பான அரசாங்கத்தின் செயற்பாடுகளின் சட்டபூர்வ தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த பொதுமக்களின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டுகின்றது. இலங்கையின் ஜனநாயகக் கலாச்சாரத்திற்கு அடித்தளமாக இருக்கும் குரலற்ற பெரும்பான்மையினரின் கருத்துக்களை தற்போதைய அரசியல் விவாதத்திற்கு வெளிக்கொணர்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும். இதன் மூலம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - சோஷல் இன்டிகேட்டரின் இவ் ஆய்வு அறிக்கையானது, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, இந்த முக்கியமான தேர்தலில் மக்கள் தகவலறிந்து முடிவெடுப்பதற்கு இன்றியமையாததாக இருப்பதோடு, ஒரு வளமான அரசியல் விவாதத்திற்கும் பங்களிக்கும் என்று கருதப்படுகின்றது.

# முறைமையியல்


இந்த கணக்கெடுப்பு ஆய்வானது, நான்கு முக்கிய இன சமூகங்களிலிருந்து (சிங்களம், தமிழ், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்) எழுமாறாக தேர்ந்தெடுக்கப்பட்ட 1352 நபர்களுடன் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேர்காணல்கள் நேரடி நேர்காணல் நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன. அதோடு தரவு சேகரிப்பிற்காக மொத்தம் 71 வெளிக்கள ஆய்வாளர்கள் (ஆண் மற்றும் பெண்) இப்பணியில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். மக்கள் தொகையின் இன மற்றும் பிராந்திய பன்முகத்தன்மையை பெறுவதற்காக பல் நிலை அடுக்கு எழுமாறு மாதிரி நுட்பத்தை பயன்படுத்தி மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆகவே, அனைத்து 25 மாவட்டங்களிலும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் அபிப்பிராயங்களை இக் கணக்கெடுப்பு ஆய்வானது பதிவு செய்துள்ளது. கணக்கெடுப்பு ஆய்விற்கான வெளிக்களப்பணி 2024 ஜூலை 1ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. மக்கள் தொகையின் மாவட்டம் மற்றும் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தரவுத் தொகுப்பு நிறையேற்றப்பட்டதுடன் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் தொகுப்பைப் (SPSS) பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# முடிவுகளின் சாராம்சம்


## பொருளாதார நிலைமை

ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும்போது, பெரும்பாலான இலங்கையர்கள் தற்போதைய பொருளாதார நிலைமை மோசமடைந்து இருப்பதாக உணர்கின்றார்கள். இந்தக் கண்ணோட்டமானது அனைத்து முக்கிய இன சமூகங்களிலும் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் பொருளாதார நிலைமைகள் மோசமாக காணப்படும் மலையக தமிழ் சமூகத்தினரில் சுமார் 35% ஆனவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்ததை விட தற்போதைய பொருளாதார நிலை முன்னேறியுள்ளதாக உணர்கின்றார்கள்.

வரைபு 01: ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, உங்கள் தற்போதைய பொருளாதார நிலையை எப்படி விவரிப்பீர்கள்? - தேசிய




வரைபு 02: ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது, உங்கள் தற்போதைய பொருளாதார நிலையை எப்படி விவரிப்பீர்கள்? - இனம்





## சர்வதேச நாணய நிதியத்தின் உதவி

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியானது, இலங்கையை எவ்வளவு தூரம் வலுப்படுத்தும் என மக்கள் நம்புகின்றார்கள் என்று வினவியபோது, இலங்கையர்கள் அதற்கு வேறுபட்ட கருத்துகளை தெரிவிக்கின்றனர். இந்தக் கருத்தானது அனைத்து இன சமூகங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது.

வரைபு 03: சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என நீங்கள் எவ்வளவு தூரம் நம்புகின்றீர்கள் என்பதைக் கூற முடியுமா? - தேசிய




வரைபு 04: சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன், இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என நீங்கள் எவ்வளவு தூரம் நம்புகின்றீர்கள் என்பதைக் கூற முடியுமா? - இனம்





## பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் காணப்படுகின்ற முன்னேற்றம்

40% இற்கும் சற்று அதிகமான இலங்கையர்கள், பொருளாதார நெருக்கடி தொடர்ந்தாலும் தற்போது நாடு குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளது என்று நம்புகின்றார்கள். அதே நேரத்தில் பொருளாதார நெருக்கடி தொடர்வதுடன், எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று 31.8% ஆனவர்கள் நம்புகின்றார்கள். அதோடு, பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடைந்துள்ளது என 19.3% ஆனவர்கள் நம்புகின்றனர். அனைத்து இன சமூகத்தவர்களிடம் கலவையான கருத்து காணப்படுகின்றது. எவ்வாறாயினும், "பொருளாதார நெருக்கடி தொடர்கிறது, ஆனால் தற்போது நாடு குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளது" என்ற கருத்து ஒப்பீட்டளவில் ஏனைய இனக்குழுக்களுக்கு மாறாக தமிழ் சமூகத்தினரிடையே, அதிகமாக காணப்படுகின்றது.

வரைபு 05: கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை, பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்தளவு தூரம் முடிந்துள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - தேசிய




வரைபு 06: கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை, பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்தளவு தூரம் முடிந்துள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? - இனம்





## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தல்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறுமாயின் பெரும்பான்மையான இலங்கையர்கள் (81.7%) வாக்களிக்கத் தயாராக உள்ளதாக கூறுகின்றனர். இந்தக் கண்ணோட்டம் அனைத்து முக்கிய இன சமூகங்கள், வயதுக் குழுக்கள், பாலினம் மற்றும் பிரதேச மட்டங்களில் காணப்படுகின்றது. மேலும், ஒப்பீட்டளவில் மக்கள் தொகையில் தாங்கள் வாக்களிப்போம் என்று கூறுபவர்களில் பெண்களுக்கு மாறாக ஆண்களே அதிகமாக உள்ளனர்.

வரைபு 07: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா? - தேசிய



வரைபு 08: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா? - இனம்





அட்டவணை 01: அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நிகழும் எனின், நீங்கள் வாக்களிப்பீர்களா?
-வயது, பாலினம் மற்றும் பிரதேசம்


| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| ஆம் | 79.4% | 82.9% | 86.8% | 76.6% | 79.0% | 82.3% |
| இல்லை | 11.3% | 10.0% | 8.4% | 12.4% | 9.5% | 10.6% |
| முடிவு செய்யவில்லை | 9.2% | 7.1% | 4.9% | 11.0% | 11.5% | 7.1% |

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தீர்மானித்துள்ளவர்களில், 57.1% ஆனவர்கள் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிப்பது என்பதை இதுவரையிலும் தீர்மானிக்கவில்லை என்றும், 42.9% இனர் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிப்பது என்பதை தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சிங்கள சமூகத்தினர் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளனர். மாறாக யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் தீர்மானித்துள்ளதாக கணிசமானளவு அதிகமாக சிறுபான்மை சமூகத்தினர் (தமிழ் - 66.4%, மலையக தமிழர்- 64.7%, முஸ்லிம் - 68.7%) தெரிவிக்கின்றனர். குறிப்பாக, பெண்களை விட அதிகமான ஆண்களும் மற்றும் நகர்ப்புற மக்களை விட அதிகமான கிராமப்புற மக்களும் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வரைபு 09: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா?
- தேசிய



வரைபு 10: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா? -இனம்




அட்டவணை 02: தேர்தலில் நீங்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்களா? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்


| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| ஆம் | 41.1% | 43.8% | 49.7% | 35.2% | 33.7% | 44.9% |
| இல்லை | 58.9% | 56.2% | 50.3% | 64.8% | 66.3% | 55.1% |

## பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் ஜனாதிபதித் தேர்தல் முடிவின் முக்கியத்துவம்


இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் தேர்தல் முடிவுகளின் முக்கியத்துவம் குறித்து வினவப்பட்ட போது இலங்கையர்கள் வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். 37.8 % ஆனவர்கள் தேர்தல் முடிவுகள் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் செயற்பாட்டில் மிகவும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதில் தேர்தல் முடிவுகள் சிறிதளவு தாக்கங்களை ஏற்படுத்தினாலும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் ஒரு முக்கிய காரணியாக அமையாது என்றும் 27.6% ஆனவர்கள் கூறுகின்றனர். மேலும் தேர்தல் முடிவுகள் பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் செயல்பாட்டில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று 18.6% ஆன இலங்கையர்கள் கூறுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் தேர்தல் முடிவுகள் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதுபவர்களில் சிறுபான்மை சமூகங்கள் மற்றும் கிராமப்புற மக்களுடன் ஒப்பிடுகையில் சிங்கள சமூகத்தினரினர் அதிகமாக உள்ளனர்.

வரைபு 11: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய




வரைபு 12: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம்




அட்டவணை 03: இந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவானது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எவ்வளவு தூரம் முக்கியமானதாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்


| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| தேர்தல் முடிவுகள் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் செயல்பாட்டில் மிகவும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் | 36.6% | 38.4% | 39.6% | 35.9% | 25.1% | 40.7% |
| பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதில் தேர்தல் முடிவுகள் சில தாக்கங்களை ஏற்படுத்தினாலும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் ஒரு முக்கிய காரணியாக அமையாது | 34.0% | 24.3% | 26.8% | 28.4% | 35.1% | 26.0% |
| தேர்தல் முடிவுகள் பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் செயல்பாட்டில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது | 17.0% | 19.4% | 18.4% | 18.8% | 16.7% | 19.0% |
| தெரியாது | 12.4% | 18.0% | 15.3% | 16.9% | 23.1% | 14.4% |

## அரசாங்கம் முன்னெடுத்த செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு


அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வெவ்வேறு செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பற்றி வினவிய போது, நாடு முழுவதுமான தரம் 1 முதல் 5 வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவச பள்ளி உணவுத் திட்டம் பற்றியும் யுக்திய - போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் சிறப்பு நடவடிக்கை மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்படுதல் ஆகிய செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்திருப்பதாக பெரும்பான்மையான இலங்கையர்கள் (80% இனிற்கும் அதிகமானவர்கள்) குறிப்பிடுகின்றனர். மேலும் 66.8% ஆனவர்கள் உறுமய திட்டத்தின் கீழ் பல்வேறு சமூகங்களுக்கு இலவச காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்திட்டம் தொடர்பில் அறிந்துள்ளதாக குறிப்பிடுகின்றனர். இருப்பினும், சொத்து வரி (புதிய கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி) தொடர்பான விழிப்புணர்வு ஒப்பீட்டளவில் குறைவாகவே (43.6%) காணப்படுகின்றது.

அனைத்து முக்கிய இன சமூகங்களினதும் கருத்துக்களை நோக்கும்போது, அவர்களில் அதிபெரும்பான்மையினர் நாடு முழுவதுமான தரம் 1 முதல் 5 வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவச பள்ளி உணவு செயற்திட்டம் தொடர்பில் அறிந்திருப்பதாகக் கூறுகின்றனர். யுக்திய - போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு எதிரான பொலிஸாரின் விசேட நடவடிக்கைப் பற்றி ஒப்பீட்டளவில் தமிழ் மற்றும் மலையக தமிழ் சமூகத்தினர் குறைவான விழிப்புணர்வை வெளிப்படுத்துகின்ற நிலையில், பெரும்பான்மையான சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் அதிகளவான விழிப்புணர்வை வெளிப்படுத்துகின்றனர். மேலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்கப்படுதல் தொடர்பிலான செயற்திட்டம் குறித்து பெரும்பான்மையான மலையக தமிழ் சமூகத்தினர் விழிப்புணர்வை வெளிப்படுத்துகின்றனர். உறுமய திட்டத்தின் கீழ் பல்வேறு சமூகங்களுக்கு இலவச காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் செயற்திட்டம் தொடர்பிலான விழிப்புணர்வின் அளவு, அனைத்து இன சமூகத்தினர் மத்தியிலும் 50% முதல் 70% வரை வேறுபடுகின்றது

வரைபு 13: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட/ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்/ தீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை – தேசிய



வரைபு 14: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட/ ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்/ தீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம்




அட்டவணை 04: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட / ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்/ தீர்மானங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை – வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.

| அறிந்துவைத்துள்ளமை | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| நாடு முழுவதும் தரம் 1 முதல் 5 வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவச பள்ளி உணவுத் திட்டம் | 85.5% | 89.9% | 85.1% | 91.6% | 88.9% | 88.2% |
| யுக்திய - போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் கட்டுப்படுத்துவதற்கான காவல்துறையின் சிறப்பு நடவடிக்கை | 85.3% | 85.4% | 88.8% | 81.9% | 85.7% | 85.4% |
| பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளொன்றிற்கான சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரித்தல் | 70.8% | 85.3% | 79.7% | 80.6% | 77.3% | 80.8% |
| உறுமய நிரந்தர காணி உறுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு சமூகங்களுக்கு இலவச காணி பத்திரங்களை வழங்குதல் | 57.9% | 71.6% | 67.5% | 65.9% | 57.8% | 68.8% |
| சொத்து வரி (புதிய கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி) | 36.8% | 47.4% | 45.6% | 41.8% | 53.8% | 41.3% |
| பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் | 32.1% | 36.2% | 31.3% | 38.4% | 31.3% | 35.6% |
| இராமாயணப் பாதை - இலங்கையில் ராமாயணத் தடங்களை இணைப்பதற்கான பாதை இணைப்புத் திட்டம் | 11.6% | 15.3% | 15.0% | 12.9% | 22.2% | 12.1% |


## அரசாங்கம் முன்னெடுத்த செயற்திட்டங்களுக்கான ஆதரவு

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் பற்றி அறிந்தவர்களில், பெரும்பான்மையானவர்கள் (90% இற்கும் அதிகமானோர்) நாடு முழுவதும் தரம் 1 முதல் 5 வரையிலான அனைத்து மாணவர்களுக்கும் இலவச பள்ளி உணவு செயற்திட்டம், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவால் அதிகரித்தல் செயற்திட்டம், யுக்திய - போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் சிறப்பு நடவடிக்கைச் செயற்திட்டம், பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் மற்றும் உறுமய நிரந்தர காணி உறுதிப்பத்திர திட்டத்தின் கீழ் பல்வேறு சமூகங்களுக்கு இலவச காணி பத்திரங்களை வழங்கும் செயற்திட்டம் போன்றவற்றிற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். இருப்பினும், சொத்து வரிக்கான (புதிய கணக்கிடப்பட்ட வாடகை வருமான வரி) ஆதரவு தெரிவிப்பவர்கள் கணிசமான அளவு குறைவாகவே (32.7%) காணப்படுகின்றது. மேற்படி காணப்பட்ட அதே மாதிரியான ஆதரவானது இன சமூகங்கள் மத்தியிலும் காணக்கூடியதாக உள்ளது.

வரைபு 15: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட / ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் / தீர்மானங்களுக்கான ஆதரவு - தேசிய




வரைபு 16: கடந்த சில மாதங்களாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட / ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் / தீர்மானங்களுக்கான ஆதரவு - இனம்




## பெருந்தோட்டத்திலுள்ள லயங்களை சட்டபூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தலிற்க்கான ஆதரவு

பெருந்தோட்ட லயங்களை சட்டபூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தலிற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்மொழிவிற்கு ஆதரவளிப்பதாக பெரும்பான்மையானவர்கள் (74.6%) கூறியுள்ளனர். அனைத்து இனக்குழுக்களிலும் பெரும்பான்மையானவர்கள் இந்தக் கண்ணோட்டத்தை ஆதரிக்கும் அதே வேளையில், சிங்கள (76%) மற்றும் மலையக தமிழ் (89.3%) சமூகங்கள் மத்தியில் இதற்கான ஆதரவு அதிகமானவே காணப்படுகின்றது.

வரைபு 17: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக? - தேசிய




வரைபு 18: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமான கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக? - இனம்




அட்டவணை 05: நுவரெலியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தோட்டப்புற லயங்கள் சட்ட பூர்வமாக கிராமங்களாக அடையாளப்படுத்தப்படும் என குறிப்பிட்டார். இதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா இல்லையா எனக் கூறுக?
- வயது, பாலினம் மற்றும் பிரதேசம்

| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| ஆதரக்கின்றேன் | 73.9% | 75.1% | 76.3% | 72.9% | 75.3% | 74.5% |
| ஆதரிக்கவில்லை | 10.5% | 11.7% | 10.4% | 12.1% | 11.6% | 11.2% |
| தெரியாது | 15.5% | 13.2% | 13.2% | 15.0% | 13.1% | 14.3% |


## ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு

ஜனாதிபதி வேட்பாளர்களின் (ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க) கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு தொடர்பில் இலங்கை மக்கள் வெவ்வேறுபட்ட கலவையான கருத்தை வெளிப்படுத்துகின்றனர். இந்தக் கருத்து அனைத்து முக்கிய இன சமூகங்களிலும் காணப்படுவதுடன், சிங்களம் (49.2%) மற்றும் மலையக தமிழ் (56.1%) சமூகங்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் அதிகமாக காணப்படுகின்றது. பெரியோர்கள் (30 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மற்றும் ஆண்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வு அதிகமாகவே காணப்படுகின்றது.

வரைபு 19: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - தேசிய



வரைபு 20: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - இனம்





அட்டவணை 06: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் அறிந்து வைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் முடிவெடுப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் அறிந்துவைத்துள்ளமை - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்

| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| அனைத்து வேட்பாளர்களினதும் கொள்கைகள் தொடர்பில் நான் நன்கு அறிந்துவைத்துள்ளேன் | 18.4% | 26.4% | 26.2% | 21.0% | 20.6% | 24.3% |
| எனது வேட்பாளரின் கொள்கைகள் தொடர்பாக நான் நன்கு அறிந்துவைத்துள்ளேன் ஆனால் ஏனையவர்கள் தொடர்பாக அவ்வளவு அறிந்திருக்கவில்லை | 23.5% | 23.0% | 26.9% | 19.4% | 13.5% | 25.4% |
| பிரதான வேட்பாளர்கள் எவருடைய கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பிலும் நான் அறிந்திருக்கவில்லை | 39.0% | 33.8% | 30.9% | 40.3% | 43.7% | 33.8% |
| தெரியாது | 19.1% | 16.8% | 16.0% | 19.3% | 22.2% | 16.6% |

## வேட்பாளர்களின் ஆற்றல் மீதான நம்பிக்கை


“பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஒரு சிறந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு IMF உடன் பேச்சுவார்த்தை நடாத்தல்” (52.3%), “நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணல்” (39.4%) மற்றும் “பொருளாதார மீட்சிக்கான மாற்று அணுகுமுறைகளைக் கண்டறிதல்” (33.1%) போன்றவற்றை செயற்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆற்றல் உள்ளதாக அதிகமான இலங்கையர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். மேலும், குறிப்பிடத்தக்க வகையில், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்தல் தொடர்பில் மக்கள் எவரையும் நம்புவதாகத் தெரியவில்லை.

வரைபு 21: முக்கிய மூன்று வேட்பாளர்களில், பின்வரும் செயல்முறைகளை செயற்படுத்துவார் என நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - தேசிய




வரைபு 22: நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?


- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்.




வரைபு 23: பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஒரு சிறந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு IMF உடன் பேச்சுவார்த்தை நடாத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?
- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 24: சிறுபான்மை சமூகங்களின் பிரச்சனைக்கு தீர்வு காண நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?
- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 25: ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கு நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 26: பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூற வைத்தலிற்கு நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 27: நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?
- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 28: வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்ய நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?
- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்



வரைபு 29: மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?
- இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 30: போருக்குப் பிந்தைய நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதியை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? – இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 31: ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்த நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்?

– இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




வரைபு 32: பொருளாதார மீட்சிக்கான மாற்று அணுகுமுறைகளைக் கண்டறிய நீங்கள் அதிகளவு நம்புகின்ற வேட்பாளர் யார்? - இனம், வயது, பாலினம் மற்றும் பிரதேசம்




## உங்கள் குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய மிகவும் பொருத்தமான வேட்பாளர்

இலங்கை மக்களிடம் தம்முடைய குடும்பத்தின் தற்போதைய உடனடித் தேவைகளை (வேலை, நல்ல சம்பளம், நிலம் அல்லது வீடு, சில நிதி உதவிகள் போன்றவை) நிவர்த்தி செய்வதற்கு யார் மிகவும் பொருத்தமான வேட்பாளர் என்று அவர்கள் நினைக்கின்றார்கள் என்று வினவிய போது, மக்கள் வெவ்வேறுபட்ட கலவையான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர். 24.3% இனர் ரணில் விக்கிரமசிங்க என்று கூறியுள்ள நிலையில், மேலும் 19.3% இனர் சஜித் பிரேமதாச என்றும் கூறுகின்றனர். மேலும் 15.5% இனர் அனுரகுமார திஸாநாயக்க என்று கூறுகின்றனர்.

வரைபு 33: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - தேசிய




வரைபு 34: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - இனம்



அட்டவணை 07: உங்கள் நேரடி குடும்பத்தின் தற்போதைய தேவைகளை நிவர்த்தி செய்ய யார் மிகவும் பொருத்தமானவர் என நீங்கள் நினைக்கின்றீர்கள்? - வயது, பாலினம் மற்றும் பிரதேசம்

| | வயது | | பாலினம் | | பிரதேசம் | |
|---|---|---|---|---|---|---|
| | 18-29 வயது | 30 வயதுக்கு மேல் | ஆண் | பெண் | நகரப்புறம் | கிராமப்புறம் |
| அனுரகுமார திஸாநாயக்க | 16.6% | 14.8% | 21.5% | 9.3% | 14.3% | 15.8% |
| சஜித் பிரேமதாச | 21.0% | 18.4% | 16.5% | 22.2% | 26.6% | 17.7% |
| ரணில் விக்கிரமசிங்க | 20.1% | 26.5% | 24.4% | 24.0% | 18.7% | 25.5% |
| எவரும் இல்லை | 30.8% | 27.8% | 26.8% | 30.8% | 29.8% | 28.6% |
| தெரியாது | 11.5% | 12.5% | 10.8% | 13.6% | 10.7% | 12.5% |

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.


மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA)
முகவரி: 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112081384-6
இணையதளம்: http://www.cpalanka.org
வலைதளம்: www.cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
டுவிட்டர்: @cpasl


Marking Social Research Count

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.


சோஷல் இன்டிகேட்டர்
முகவரி: 6/1B, 1/1, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 05, இலங்கை.
தொலைபேசி: +94112826010
இணையதளம்: http://cpalanka.org/survey-research/


CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

25 YEARS
1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES